**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 23.12.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : .12.2021 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

**( 1 )** தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் நிறுவனத்திற்கு இராசிபுரம் நகராட்சி பங்குத் தொகை 2020–2021–ஆம் ஆண்டிற்கு ரூ. 50000/–மும், 2021–2022–ஆம் ஆண்டிற்கு ரூ. 75000/–மும், ஆக மொத்தம் ரூ. 125000/– செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(2178/19/சி1)

**தீர்மானம் எண். 1189**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**( 2 )** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் லாரி TN 28 BZ 9021 தகுதிக்காண் சான்று பெற்று ஒரு வருட காலம் முடிந்துள்ளதால் வாகனத்தினை ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகள் சரி செய்ய ரூ. 14995/–க்கான விலைப்புள்ளி வாகனம் தயாரிப்பு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான TV சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. பொது மக்களின் குடிநீர் தேவையை கருத்திற்கொண்டு பணியின் அவசியம் கருதி குடிநீர் லாரியினை பழுதுபார்க்க ரூ. 14995/– செலவினத்தில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை மற்றும் செலவுத் தொகை வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை மற்றும் செலவுத் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(4701/21/இ2)

**தீர்மானம் எண். 1190**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**( 3 )** இராசிபுரம் நகராட்சியில் தேசிய சுகாதாரப் பணிகள் 2021–2022–ஆம் ஆண்டு தனிப்பட்ட மான்யத்தின்கீழ் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு சுகாதார மற்றும் ஆரோக்ய மையம் ஏற்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறை ஆணை ந.க.எண். 32454/2021/அம்ரூட் 2 நாள் 17.12.2021–இல் நிர்வாக அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது செயல்முறை ஆணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(4898/21/இ1)

**தீர்மானம் எண். 1191**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் LCV வாகனம் எண். TN 28 BW 9274 கீழ்கண்ட பழுதுகள் ஏற்பட்டுள்ளது.

1) கிளட்சு பிளேட் புதியதாக மாற்றுதல்
2) லோடிங் கல் கவர் அசெம்பளி புதியதாக மாற்றுதல்
3) ஹாரன் பழுது நீக்குதல்
4) கிளட்சு ஒயர் புதியதாக மாற்றுதல்
5) 4 வீல் அலைன்மெண்ட் பார்த்தல்

பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பழுதுகளை உடன் சரி செய்ய வேண்டியுள்ளது. எனவே, உள்ளூரில் விலைப்புள்ளிகள் பெற்று உத்தேச செலவினம் ரூ. 10000/–க்குள் பழுதுகளை சரிசெய்து கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) விலைப்புள்ளிகள் பெற்று உத்தேச செலவினம் ரூ. 10000/–க்குள் பழுதுகளை சரிசெய்ய தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெற்றதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(எச்1/4938/21)

**தீர்மானம் எண். 1192**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பில் உபயோகப்படுத்தப்பட்டு, தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள மின் பொருட்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முறையில் விற்பனை செய்ய மூன்றாம் அழைப்பாக 22.12.2021 அன்று கலந்து கொள்ள அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, 22.12.2021 அன்று நடைபெற்ற ஏலத்தில் கீழ்க்கண்டுள்ள ஏலதாரர்கள் கலந்து கொண்ட விவரங்கள் வருமாறு.

1) திரு பி. அன்பழகன், அமராவதி, பழைய இரும்பு கடை, நடுப்பட்டி, வீசாணம் (அஞ்சல்) நாக்கல் – ரூ. 40500/–
2) திரு ஏ. மருதை, ஸ்ரீ தனலட்சுமி ஸ்டீல்ஸ், 168பி1, சேலம் சாலை, நாமக்கல் – ரூ. 40200/–

ஏலத்தில் திரு பி. அன்பழகன் என்பவர் ரூ. 40500/– என்ற உட்சபட்ச ஏலத் தொகை கோரியுள்ளார். அன்னாரது ஏலத் தொகையினை ஏற்று உபயோகமற்ற மின் பொருட்களை விற்பனை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அதிகபட்ச ஏலம் கோரியுள்ள திரு பி. அன்பழகன் ஏலத்தினை ஏற்று பொருட்களை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(233/21/இ1)

**தீர்மானம் எண். 1193**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(6) இந்நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2020–21–இல் வார்டு எண். 8 வீட்டு வசதி வாரியத்தில் உள்ள பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ. 48.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு பணிகள் இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 20543/2021/பி2, நாள் 16.11.2021–இல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, பணி மேற்கொள்ள 15.12.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் விலாசம் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | அசோக் கன்ஷ்ட்ரக்சன், 10/243, துறையூர் மெயின் ரோடு, பொன்னேரி அஞ்சல், நாமக்கல். | ரூ. 48.00 இலட்சம் | – | 4.64 % |
| 2 | திரு வி. ஜீவானந்த், ஒப்பந்ததாரர், 6/853, EB காலனி, பரமத்தி ரோடு, நாமக்கல் | | – | 4.91 % |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1–இல் உள்ளஅசோக் கன்ஷ்ட்ரக்சன், வ.எண். 2–இல் உள்ள திரு வி. ஜீவானந்த், ஒப்பந்ததாரரைவிட குறைவாக அளித்துள்ளார். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டைவிட அதிகமாக இருப்பதாலும், பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதாலும் அசோக் கன்ஷ்ட்ரக்சன், ஒப்பந்ததாரரிடம் விலைப்புள்ளி குறைத்து தர கடிதம் மூலம் கோரப்பட்டது. தார் உள்ளிட்ட கட்டுமானப் பொருட்கள் மற்றும் டீசல் விலையேற்றம் காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பணிகளுக்கும் 4.64% கூடுதலான விலை விகிதத்தில் இப்பணிகளை செய்து வழங்க ஒப்புக்கொள்கிறேன் என தெரிவித்து அசோக் கன்ஷ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் 21.12.2021 அன்று கடிதம் வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும், பொறியாளர் கையேடு பக்கம் எண். 9–இல் பிரிவு 2.7.2.–இல் 5% வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி வ.எண். 1இல் உள்ள ஒப்பந்ததாரரான அசோக் கன்ஷ்ட்ரக்சன் மதிப்பீட்டை விட 4.64 % கூடுதலான விலை விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும் திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி அசோக் கன்ஷ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 4.64 % கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(3707/2021/இ1)

**தீர்மானம் எண். 1194**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(7)** இராசிபுரம் நகராட்சி பொதுப்பிரிவிலுள்ள அலுவலக நகல் இயந்திரம் SHARP COPIER-க்கான Developer Kit, Drum மற்றும் Pickup Roller for 2 Trays ஆகியவைகளை மாற்றி வழங்க வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) Spyder Technology, 153, Suramangalam Main Road, Salem-5 | - | Rs. 35500/- |
| 2) Chandra Hi Tech, 209, Periyar Nagar, Erode -1 | - | Rs. 36800/- |
| 3) Raj Computers, 13, Awaiyar Street, Suramangalam, Salem-5 | - | Rs. 37650/- |

வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள M/s. Spyder Technology நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க்கவும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(4144/21/இ1)**

**தீர்மானம் எண். 1195**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ர. அசோக்குமார்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.